லாபரடரியில் பகல் நேர மாணவர்கள் அவர்களுடைய ஆராய்ச்சியைத் தொடங்கி முடிப்பதற்கு இரவு 8 அல்லது 9 மணி சில சமயங்களில் ஆகிவிடுகிறது. ஆகவே, மாலை நேரக் கல்லூரியில் கெமிஸ்ட்ரியைப் பொறுத்த வரையில் இடம் ஒதுக்கித்தர இடர்ப்பாடு பல இடங்களில் ஏற்படுகின்றன. கெமிஸ்ட்ரியைப் பொறுத்தவரையில் தான் ஆய்வுக்கூடங்கள் தேவைப்படுகின்றன. ஃபிஸிக்ஸ் என்றால் குறிப்பிட்ட நேரத்தில் ஆராய்ச்சிகள் முடிந்துவிடும். ஆனால், கெமிஸ்ட்ரி க்ளாஸ் நடைபெறுவதற்கு இட வசதி ஏற்படாத காரணத்தால் கெமிஸ்ட்ரி வகுப்பு மாலை நேரக் கல்லூரிகளில் ஏற்படுத்தப்படவில்லை. எங்காவது அதற்கான வசதி வாய்ப்புகள் பெருகக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், அரசாங்கம் தனியாகக் கவனித்துத் தக்க முடிவு எடுக்கும்.

திரு. ரா. ரா. முனுசாமி: புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்ற அரசினர் கலைக் கல்லூரிகளில்—குறிப்பாக திண்டிவனம், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில்—மாலை நேரக் கல்லூரிகள் திறக்க அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அந்த இடங்களில் பகல்நேரக் கல்லூரிகளை ஒழுங்காக நடத்தவே போதுமான இட வசதி இல்லை. அங்கே பட்டப் படிப்புத் துவங்குவதற்குப் போதுமான அளவு கட்டட வசதிகள் இல்லை. கட்டட வசதிகள் பெருகி பி.எஸ்.ஸி. வகுப்புகள் தொடங்கப்படாமல் கல்லூரி தொடங்கி நான்கைந்து ஆண்டுகள் ஆகி இருக்கின்றன. இந்த ஆண்டுதான் கடலூரில் பாட்டனி பி.எஸ்.ஸி. துவங்கியிருக்கிறது. மற்ற பி. எஸ்.ஸி. துவங்கப்படவில்லை. விருத்தாசலத்தில் கட்டட வசதி ஏற்பட்டிருக்கிற காரணத்தால், அங்கே இந்த ஆண்டு இரண்டு பி.எஸ்.ஸி. வகுப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. திண்டிவனத்தில் துவங்கப்படவில்லை. முதலில் அதைக் கவனித்த பிறகுதான் மாலை நேரக் கல்லூரியைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மதுரை பல்கலைக் கழகத்தில் அன்னிய மொழிகள் பயிற்சி

* 414 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் உள்ள மதுரை பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு, ஜெர்மனி, ரஷ்யன் மொழிகள் கற்றுத்தர வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மதுரைப் பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு, ரஷ்யன் மொழிகள் கற்றுத்தர வசதிகள் உள்ளன. ஜெர்மன் மொழியை இந்தப் பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொடுப்பதில்லை.

திரு. என். கிட்டப்பா: பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்ய நாட்டுப் பல்கலைக்கழகங்கள் இவற்றில் எங்கேயாவது தமிழ் கற்பிக்கப் படுகிறதா? தமிழ் பேராசிரியர்கள் இந்த நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ் கற்பிக்கப்படுவதற்கு அமர்த்தப்பட்டுள்ளனரா?

1971 ஜூலை 24]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இன்டோ-ஜெர்மன் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம், இன்டோ-ப்ரஞ்ச் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம், இன்டோ-ரஷ்யன் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம் என்று இந்திய அரசு ஏற்படுத்தியிருக்கிற வகையில் அங்குள்ள பேராசிரியர்களை இங்கு கொண்டு வருவது, இங்குள்ள பேராசிரியர்களை அங்கு அனுப்புவது என்ற முறைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அந்த வகையில் இன்டோ-ப்ரெஞ்ச் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம் அமைப்பின் மூலம், இன்டோ-ரஷ்யன் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம் அடிப்படையின் மூலம் மதுரைப் பல்கலைக்கழகத்தில் இந்த இரண்டு மொழிகளையும் சொல்லிக் கொடுப்பதற்கு வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இங்கிருந்து தமிழ் பேராசிரியர்கள் ப்ரெஞ்ச் பல்கலைக்கழகம் ஒன்றிலும், ரஷ்யாவிலும் சொல்லித் தருகிறார்கள். அமெரிக்கா விலும் சில இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். முழு விவரமும் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழு விவரங்களும் தரலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: மதுரைப் பல்கலைக்கழகத்தில் எந்தெந்தக் கல்லூரிகளில் ப்ரெஞ்ச், ரஷ்யன் மொழிகள் போதிக்கப் படுகின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: யுனிவர்ஸிட்டி சார்பாக சொல்லித் தரப்படுகிறது. எம்.ஏ. டிக்ரி கோர்ஸ் ப்ரெஞ்ச் இரண்டு ஆண்டுகள், சர்டிபைட் கோர்ஸ் இன் ப்ரெஞ்ச் ஒரு ஆண்டு, டிப்ளமா கோர்ஸ் இன் ப்ரெஞ்ச் ஒரு ஆண்டு என்றிருக்கிறது. சர்டிபைட் அன்ட் டிப்ளமா கோர்ஸ் இன் ரஷ்யன் இந்த ஆண்டு பல்கலைக்கழகம் சார்பாகச் சொல்லித் தரப்படுகிறது.

திரு. க. சுப்பு: சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை ஆராய்ச்சிப் பிரிவுகளில் சேர விரும்பும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு க்வாலிபைட் ப்ரொஃபஸர்ஸ் அமர்த்தப்படவில்லை. ஆனால் கேரளா பல்கலைக் கழகத்தில் அப்படிப்பட்ட க்வாலிபைட் ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த குறையைப் போக்குவதற்கு தகுந்த ஆசிரியர்களை அமர்த்த நடவடிக் கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. சொ. காவேரிமணியம்: மதுரைப் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு போன் றவை கற்றுக் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை தரப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரைப் பல்கலைக்கழகத்தில் ரஷ்ய, பிரெஞ்சு மொழிகள் சொல்லிக் கொடுக்கப்படுகிறதே, அவற்றில் ஒவ்வொரு மொழியிலும் பயிலும் மாணவர்கள் எத்தனை பேர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாணவர்களின் எண்ணிக்கை தரப்படவில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: மாஸ்கோ நகரில் தமிழ் பள்ளி ஒன்றில் தமிழ் மொழி கற்றுக் கொடுக்கப்படுவதாக அறிந்தேன். அதைக் கற்றுக் கொடுக்க நம் அரசு தமிழ் ஆசிரியர் யாரையாவது அனுப்பி வைத்திருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது மதுரைப் பல்கலைக் கழகம் பற்றிய கேள்வி.

திரு. கா. காளிமுத்து: மதுரைப் பல்கலைக்கழகத்தில் ப்ரெஞ்ச், ரஷ்யன் மொழி கற்றுத்தர ப்ரெஞ்ச், ரஷ்ய நாட்டைச் சேர்ந்த பேராசிரியர்கள் அங்கு பணியாற்றுகிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் கூறியபடி, இன்டோ-ப்ரெஞ்ச் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம் அடிப்படையில் ப்ரெஞ்ச் ஆசிரியர்கள் வந்து ப்ரெஞ்ச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ரஷ்ய ஆசிரியர்கள் ரஷ்ய மொழி சொல்லிக் கொடுக்கிறார்கள்.

Shift system in Colleges

* 415 *Q.*—THIRU K. P. GOPAL: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether shift system will be inroduced in colleges of the State in view of the heavy rush for admission; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. பி. கோபால்: சட்டக் கல்லூரியில் இம்முறை வெற்றிகரமாக நடைபெற்று வருவதால், அந்த அடிப்படையில் மீண்டும் பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மிக நெருக்கடி இருக்கிற கல்லூரிகளில் இந்த முறையை மேற்கொள்ளலாமா என்ற கருத்து தெரிவிக்கப்பட்டபோது சென்னைப் பல்கலைக் கழகமும், மதுரைப் பல்கலைக்கழகமும் அதற்கு அவசியமில்லை, இப்போதுள்ள அமைப்பில் கல்லூரிகளில் போதிய இடவசதி இருப்பதால், ஷிப்ட் முறை தேவை இல்லை என்று கருதுகிறார்கள். ஷிப்ட் முறை வருவதால் வேறு டிஸிப்ளின் மற்றவைகளைக் காப்பாற்றுவதில் பல சங்கடங்கள் ஏற்படும் என்று கருதுவதால் தேவை இல்லை என்று கருதுகிறார்கள். மிக நெருக்கடியுள்ள கல்லூரிகளில் இந்த ஷிப்ட் முறையைக் கொண்டுவந்தால், நெருக்கடியைத் தவிர்க்கலாம் என்ற கருத்தை அரசு தெரிவித்தும் சிண்டிகேட் அவையினர் ஆராய்ந்து இப்போது அவசியமில்லை, தேவைப்படும்போது பார்த்துக்கொள்ளலாம் என்றும் அமைதிக் குறைவு அதிகமாக ஆக வாய்ப்பு ஏற்படும் என்று கருதுவதால், இந்த முறை கொண்டுவரப்படவில்லை.